**Judicial Form No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE**
**NAGAPATTINAM.**
**C.C.564/2025 –** P.W. 9

Deposition of witness for Prosecution:

| | |
|---|---|
| Name : திரு. பீர்முகமது | Father's Name. அலியார் |
| Village : நாகூர் – | Age: 48 |
| Date :21.07.2026 | தொழில் : வியாபாரம் |

நம்பர்: 9843755509

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **21st day of July 2026.**

Signature of Witness

**Tmt. S. Umamakeswari (Name of the Interpreter)**
Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **21st day of July 2026.**

Signature of Interpreter

**( எதிரி ஆஜரில்லை. அவருக்காக அவரது தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜராக அனுமதிக்க வேண்டி தாக்கல் செய்த u/s 355 of BNSS, 2023ன் கீழான மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. )**

**அரசு தரப்பு முதல் விசாரணை.**

நான் தற்போது நாகூர் நூர்சா தைக்கால் தெருவில் குடியிருந்துவருகிறேன். நான் நாகூர் தர்கா வாசலில் பூஜை சாமான்கள் விற்பனை செய்துவருகிறேன். இந்த விபத்தில் இறந்துபோன சையதுஅலி (எ) செல்லதம்பி என்பவர் எனது தூரத்து உறவினர் ஆவார். கடந்த 26.10.2020ம்

தேதி மாலை சுமார் 06.00 மணியளவில், அவர் விசேஷத்திற்கு அவரது மனைவி குழந்தைகளுடன் இருசக்கர வாகனத்தில் நாகூருக்கு வந்திருந்தார். அந்த விசேஷத்தை முடித்துவிட்டு மஞ்சக்கொல்லையில் உள்ள அவரது மனைவி வீட்டிற்கு செல்லவதற்காக இருசக்கர வாகனத்தில் தனது குடும்பத்துடன் இஜிஎஸ் பிள்ளை ரோட்டில் சென்று, இசிஆர் ரோட்டில் ஏறும்போது கார் மோதி விபத்து ஏற்பட்டதாக கேள்விப்பட்டேன். சம்பவ இடத்திலேயே அவரும், அவரது இளைய மகனும் இறந்துவிட்டார்கள். உடனடியாக தகவல் அறிந்து நாங்கள் நாகப்பட்டினம் அரசு மருத்துவமனைக்கு சென்றோம். அவரது மனைவிக்கும் மற்றொரு மகனுக்கும் அடிப்பட்டிருந்தது. இறந்துபோனவர்களை மார்சுவரியில் வைத்திருந்தார்கள். போலிசார் என்னை யார் என்ற விபரத்தை விசாரித்தார்கள்.

**எதிரிதரப்பு குறுக்கு விசாரணை – இல்லை.**

**மறுவிசாரணை – இல்லை.**

G KRISHNAN

Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.21 16:42:02 +0530

**Judicial Form No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE**
**NAGAPATTINAM.**
**C.C.564/2025 –** P.W. 10

Deposition of witness for Prosecution:

| | |
|---|---|
| Name : திரு. முகமதுஜமீல் | Father's Name. அப்துல்வாகித் |
| Village : நாகூர் | Age: 57 |
| Date :21.07.2026 | தொழில் : வியாபாரம் |

நம்பர்: --

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **21st day of July 2026.**

Signature of Witness

**Tmt. S. Umamakeswari (Name of the Interpreter)**
Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **21st day of July 2026.**

Signature of Interpreter

**( எதிரி ஆஜரில்லை. அவருக்காக அவரது தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜராக அனுமதிக்க வேண்டி தாக்கல் செய்த u/s 355 of BNSS, 2023ன் கீழான மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. )**

**அரசு தரப்பு முதல் விசாரணை.**

நான் தற்போது நாகூர் நூர்சா தைக்கால் தெருவில் குடியிருந்துவருகிறேன். நான் நாகூர் பேருந்து நிலையத்தில் பாணி பூரி விற்பனை செய்துவருகிறேன். இந்த விபத்தில் இறந்துபோன சையதுஅலி (எ) செல்லதம்பி என்பவர் எனது அக்கா மகன் ஆவார். கடந்த 26.10.2020ம் தேதி

மாலை சுமார் 07.00 மணியளவில், நான் எனது கடையில் இருந்தபொழுது, எனது அக்கா மகன் சையதுஅலி (எ) செல்லதம்பி அவரது மனைவி மற்றும் இரண்டு குழந்தைகளுடன் இருசக்கர வாகனத்தில் இசிஆர் ரோட்டில் சென்று கொண்டிருந்தபொழுது கார் மோதி விபத்து ஏற்பட்டதாக கேள்விப்பட்டேன். உடனடியாக நாகப்பட்டினம் அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தோம். அப்போது எனது அக்கா மகன் சையதுஅலி (எ) செல்லதம்பியும், அவரது மகன் இதயதுல்லாவும் இறந்தவிட்டதாக சொல்லி அவசர சிகிச்சை பிரிவில் வைத்திருந்தார்கள். அவரது மனைவி மற்றும் மற்றொரு குழந்தைக்கு காயம்பட்டதாக சொல்லி சிகிச்சைக்கு வைத்திருந்தார்கள். பின்னர் மறுநாள் போஸ்ட் மார்டம் செய்து பாடியை ஒப்படைத்தார்கள். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**எதிரிதரப்பு குறுக்கு விசாரணை – இல்லை**.

**மறுவிசாரணை – இல்லை.**

G KRISHNAN

Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.21 16:42:21 +0530